ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

வயலூர் ஸ்ரீ மன்னப்ப ஐயங்கார் ஸ்வாமி அருளிச்செய்த

# ॥ ஸ்ரீவேதாந்ததேசிகன் சந்தவிருத்தம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to Smt. Vasundara Ramarajan of California and Sri. A. S. Rajagopalan of Ohio for thoroughly proofreading this document.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

# ॥ ஸ்ரீவேதாந்ததேசிகன் சந்தவிருத்தம் ॥

பூவின்மன்னு மங்கைதாள் பொருந்து மார்பனார் புகழ்
யாவும் அங்கம் வேதநான்கு பாடுமாறனாகம
மேவியோங்கு பாச்சியம் விதித்தயோகி நாமமே
நாவிலங்கு தூப்புலய்யர் பாதநண்ணு நெஞ்சமே (1)

மூன்றுநான்கொ-டேழுமூன்று நாலுமூன்று மூன்றுமாய்த்
தோன்றுபாக நாலிலாய தூய தத்துவத்தையும்
நான்றி தந்த பேறுடன் நவின்றசார மொன்றினான்
மூன்றிலுள்ள மொய்த்தருள் முயன்ற தேசிகேசனே (2)

முத்தர் பத்தர் கீர்த்தியர்க்கி தத்திலுற்ற நாரணன்
சித்த முற்ற பேறுசேர்தல் பாவமே திகழ்ந்தவர்
வித்தியாறு பெற்று வந்து வேந்தர்மைந்தர் நீதியே
சுத்தகஞ்சொல் மால் அருள் சுரக்கு வேத சூரியே (3)

அசார புத்த சங்கராதி அற்பசாரம் இம்மையும்
குசாரமாஞ் சுவர்க்கமாய கோதில் தானு ரீயமும்
விசாரமற்று விட்டுயர்ந்து வேதமௌளி தன்னுடன்
சுசாரமூன்றை உள்ளி நின்றருள் செய் தூய தேசிகா (4)

திறங்கொள்மூல மாயவோர் எழுத்திலுற்ற சேடமாய்
மறந் திகழ்ந்த வஞ்சமாற்றி ரண்டில்வாய் விதேயமாய்
சிறந்தவஞ்சில் ஈசனில் திகழ்ந்திருந்த தங்கமா
மறந்திடாமல் ஈதருள் மறைக்க மைந்த சூரியே (5)

படைத்தமைக்கு நாரணன் பதத்திலுற்ற சீவர்கள்
கிடைப்பதான நியாச பத்தி கீழ்மை போக்கு நன் பதம்
மிடைய தாம் விரோதியுற்ற மேலறிந்து நான்பதைத்-
தடைக்கலம் கொள் என்னை என்றும் ஆகமாந்த தேசிகா (6)

www.sadagopan.com

சயங்கொள் பத்தர் பாதமெய்த முத்தர்சுத்தர் நித்தியர்
வியங்கொண்மாய வீவின்வானம் என்றுமேவு காலமும்
பயங்கொடன்ன தீனமாய பஞ்சமுத்தி மாதவன்
அயங்கொள் ஞான நன்னருள் நயந்து தேசி கேசனே (7)

ஆயிரங்கொள் கோடியூழி ஆர்ந்து போற்றி உய்ந்தவந்
தாய பூவனேற்றி தோன்றி யார் தவத்த சங்கரன்
தூயதா நினைத்த தேவு சொல்லின் ஞான சீபதிக்
காயசார்வுணர்த்தி சேர்த்தனந்த சூரி மைந்தனே (8)

எட்டின்முன் பதத்தின் மூன்றெழுத்தினால் எனக்கெனும்
கட்டுமற்ற வர்க்கெனும் கலம் குடம்பினான் எனும்
தொட்டமேல் பதங்களால் உபாயமுத்தி தொல்லை சேர்
விட்ட நான் எனக்கெனும் மதிப்பரும் விரத்திதா (9)

பத்தி தான்னியாசமும் பறந்துகக்க மானிடர்க்-
குத்தி தான் குருக்களால் உகந்த நிட்டை உய்ந்திடம்
வித்தமுத்தி ஒத்த தீங்கு வேறு பாடு சேருமே
இத்தை நான் அறிந்துகக்க வந்து பார் எம் ஈசனே (10)

ஞானமாறு பேறுஞான நல்லதெய்வ யாகமாய்
ஞானயோக மொத்த பத்தி யானயோக மூன்றினால்
வானமெய்து வார்மிகுன்னி யாசயோக மூன்றினால்
நானதின்றி நின்ன பாத நண்ணும் எங்கள் நாதனே (11)

பத்திசக்தி அத்தன் ஞான மற்ற பற்று நூற்றகை
ஒத்தியாம் விளம்பமுற்ற வேற்றல் என்ன நான்கினால்
ஒத்தநாலு மூன்றினால் இரண்டில் ஆறு நான்குமாய்ப்
பத்தொடஞ்சு தக்கவைக்கு மாயநின்ன பத்தியே (12)

அய்ய மாலினானும் கூடி விந்நினைத்த தன்றியும்
பொய்யன் மந்த செய்கை போய்ப் புரிந்து வேறிலாமையால்
ஐயமற்றுளந்தெளிந்து மாறு பாய மாய் நினை
கொய்யும் அங்கம் அஞ்சு கூறு நின்ன பாதம் எய்தவே (13)

www.prapatti.com

நானும் என்ன தாம் அனைத்து நாத சீபதிக்கி தாம்
வானுபாய மாம் பரங்கள் வல்லவன் தவன்றிறத்
தான பேறும் அப்படிக்கி தென்று தந்ததுன்றகை
வான் பிறம் அடைக்கலம் கொள் ஆகமாந்த தேசிகா (14)

வல்ல ஞான முத்தி உற்ற வன் பரங்கொள் மாதவன்
சொல்லறிந்துளந்தெளிந்து சுற்றுமோர் பரந்துறந்
தொல்லை வால் உகப்புடன்னின் செய்கையோர் மனங்கடா
தொல்லை வேதமௌளிசூரி யான தூய தேவனே (15)

முக்கியங்கொண் மந்திரங்கள் மூன்றினுள்ளம் எய்துவார்
தக்க தன்மை யான சார்வு பேறுசின்ன மாமொறை
துக்கமுற்ற வச்சமின்மை தோற்றமுள்ள சிந்தையின்
மிக்குமாக மாந்த சூரி பாதபக்தி மேலையே (16)

காலம் ஒன்று மீதிலாதுகந்து செய்து காதலாய்
நாலிகைந் தருச்சை போற்றி நோக்கு நங்குருக்களின்
மாலிலங்கிதஞ்சினாய வாய்ந்த மூன்று சார்வதா
வேலை வண்ணர் உள்ளமாய்ந்த வேங்கடேச சூரியே (17)

ஆகமாந்த தேசிகர்க்கமைந்த தொண்டர் தொண்டராய்
ஆக(கு)மத்தை நீங்கி மற்றை நீங்கும் இங்கும் ஆவதோம்
ஆகமுற்றுயர்த்தும் அப்ப தப்பொருட்கள் ஈதிறே
போகமோடு தன்மை முத்தி புறப்பயன்கள் வேண்டிலேன் (18)

பாசியத்தில் ஓர்தலும் பதின்மர் பாடல் சிந்தையாம்
வாசியின்றி நன்பதிக்குகந்த வல்ல தேவையாய்
மாசறைந்து மூன்று பத்தெழுத்தில் வாய்ந்த நிட்டையா
ஆசையற்ற தொண்டர் தொண்டு மாம்படிக்கு நீயருள் (19)

வேதமௌலி தேசிகர்க்கு வீவில் தொண்டரான நாம்
போதலர்ந்த பூவின்மங்கை மன்னு நாதன் புன்தயைக்கு
ஆதரங்கொள் பாத்திரங்களாய பாவமுற்றலும்
ஏதுவோடு நாசம் எய்தி ஈனமொன்றும் இன்றியே (20)

www.prapatti.com

பொன்னரங்கர் தாமுகந்த புண்ணியங்கள் தொண்டர் சேர்
நன்னலங்கொள் தேசமே நயந்து நாமிருக்கவும்
நின்ன பாதம் ஒன்றி சிந்தை நீடு நிற்கும் இன்பமர்
மின்ன பேறெனக்கருள் சிறக்க எங்கள் நாதனே (21)

தேவுமற்றிராது நின்று சேர்நிமித்தம் ஒன்றினால்
தேவர் தென்னர் பூவமௌலி உன் நினைந்த போதுமா
நாவுடன் புலன் மனம் மருத்தருக்களைந்துடன்
தேவுணர்த்த மத்திமத்தை நாடிசேர் எம் ஈசனே (22)

அங்கிபூவர் தென்னர் தேவர் நற்பகற்கள் ஆண்டுடன்
தங்குவாயு பானு திங்கள் சேர்மினும் சலேசனும்
பொங்கும் இந்திரன் விரிஞ்சன் அன்று போய் நடத்தவே
இங்கிருந்து மீதுமாயை ஈறுதாவெம் ஈசனே (23)

அனைத்தவர்க்கும் ஈதுசேரும் அன்று மாதவன்றனைத்
தினைக்கொள் போதிலும் விடாது தேர்ந்துமீட்சி இன்றியே
நினைத்த தேன் வயங்கு செய்ய நீ உகந்து நன்றருள்
வினைக்கொள் எண்ணில் ஈவடர்த்த வேங்கடேச சூரியே (24)

ஞான சத்தி சேர்தயைக்கு நற்குறிக்கண் பார்த்தருள்
ஆன மித்தனைத்த சீவர் மேலில் உற்ற நாதனார்
வானிலங்கும் ஒத்தமாதுடன் கொள் சித்த வேதுவே
நானறிந்த துய்ய நின்றருள் கொள் வேங்கடேசனே (25)

ஆதிசாதி ஐந்தினோர்தல் வேறிலாமை ஆக்கடில்
ஆதரங்கொள் மால் பதத்தரும் பரங்கள் வைக்கலாம்
ஓதும் அங்கமைய்ந்தினோடு முத்தியேது என்கையும்
கோதில் கால மைந்துள் செய்கை கூறவும் பரிந்தருள் (26)

பாதமீன்ற சாதியாலும் உற்ற செய்கை யால் பணிந்-
தேதமின்றி ஏத்தும் எந்தை தேவர் தூய தொண்டரே
போதிலொத்த சீலமார்ந்து மொத்த பொன்னொடொப்பரே
ஈதில் என்னை நாட்டு வேதமௌலியேத்து சூரியே (27)

www.prapatti.com

உண்மை சொல்லுமாக மாந்தமோது சீல முற்றவர்
    வண்மை எண்ணின் மீதியன்ற சந்தராதல் தீதிலாத்
தண்மை உற்ற சூரி நேரில் தாதர் பாத பங்கயம்
    கண்மனங்கள் பற்றல் இங்கு கார்மறைக்கு நாதனே (28)

வித்தி காவல் ஈசன் மாயை வேறு ஞானம் ஆக்கினான்
    புத்தியோடெனக்கறாத போதமெய்தி பத்தர் தான்
பத்தனாய்ச் சரண் படைத்து நண்ண நாரணன் பதம்
    முத்தி தாவனாதியாம் ஒழிக்கமைந்த சூரியே (29)

குணம் கொடுத்த-வங்கெடுத்து கோது கேட்டுணர்த்தியும்
    வணங்கி நாம் வணங்கி நின்ற சீர் மிகுந்த நாரணன்
குணஞ்சரண் சரண் புகுந்து கோதில் சீர் பரன் பதம்
    மணங்கொடேவை ஏயநா மகிழ்ந்தருள் கொள் ஈசனே (30)

குறிக்கொள் ஞானம் உற்றிகழ்ந்து கோதில் பேறு மாறுமாம்
    வெறிக்கொள் போத மாது சேர்ந்த வீவில் தன் சரண் புகக்
குறிக்களேந்தி நம் வினைகள் பத்திசேமம் ஏத்தினார்
    குறிக்கொள் வேதமௌலி தேவிற் கோய்வு தா உணர்த்தியே (31)

நம் கிடாம்பி அப்புளார் நவின்ற ஞான தீபமா
    றங்கமைந்துள் ஆறு தந்த வாகமாந்த தேசிகா
எங்கும் உன் தயைக்கு நானினைத்த மாத்திரங்கிடா
    இங்கு நானுரைத்து வாழ்வன் என்றுமொக்கு மீதையே (32)

தத்துவத்துணர்த்தி ஞானதீபம் ஏற்று மாரியர்
    பத்திமுத்த சேவையாதின் அய்ய குன்ற சீலமே
எத்திசைக்கும் இங்கெதிர்க்கள் இல்லையென்ற சந்தமே
    அத்தனைக்கு நீயருட் கொள் ஆகமாந்த சூரியே (33)

மன்னனாதி மாமலர்க்கொள் மங்கை சேனை நாதனார்
    மாறனாத யோகிபங்க யக்கண்மால் இராமனார்
அன்னை யாமுனேயர் நம்பி ஆரெதீசன் என்பிரான்
    ஆங்கடாம்பி மாண்பிலார் அரங்கராசர் அப்புளார் (34)

வேங்கடேச தேசிகா விளங்கு நான்கு பேரினாய்
ஓங்குமுன் குணங்கள் வேத மோதுநாம் இதெண்ணிலார்
ஆங்குணங்கள் போற்றினேன் இதான துண்மை நீபொறுத்-
தீங்கிருட் தருக்கள் மீது நின்ன நீர்மை எண்ணியே (35)

ஆகமந்தனைக்கனைத்து மீசனில்ல தொன்றுமொன்-
றாகமாந்த சொல்லுறுத்து மைத்தியங்கு சாரமே
ஆகமாந்த மூன்றினுள் அமர்ந்தவீடகற்றவர்
ஆகமாந்த தேசிகர்க் கமர்ந்துவாய்ந்து வாழ்வரே (36)

॥ சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥



www.prapatti.com